सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்

## யாழ்ப்பாணம்

## ஊடக அறிக்கை

### இந்தியாவில் இளமாணி, முதுமாணி மற்றும் ஆராய்ச்சிக்கான புலமைப்பரிசில்கள் மற்றும் கலாநிதிப்பட்ட ஆய்வுக்கான புலமைப்பரிசில்கள்.

இந்திய அரசு இந்தியாவின் முன்னணிப் பல்கலைக்கழகங்கள் சிலவற்றில் கற்பதற்குத் தகுதியான இலங்கை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வருடாந்தம் வழங்குகிறது. இதில் இளமாணி, முதுமாணி மற்றும் ஆராய்ச்சிக்கான புலமைப்பரிசிலும் கலாநிதிப்பட்ட ஆய்வுக்கான புலமைப்பரிசிலும் பின்வரும் விதத்தில் அடங்கும்.

**எண்ணிக்கை**

- **நேரு ஞாபகார்த்த புலமைப்பரிசில் /** கலாச்சார உறவுகளுக்கான இந்தியப் பேராயத்தின் புலமைப்பரிசில் - 100
  (மருத்துவப்பட்டப்படிப்புகள் தவிர்ந்த பொறியியல், விஞ்ஞானம், வணிகவியல், வர்த்தகம், பொருளியல், மானிடவியல், மற்றும் கலை(சாஸ்த்திரிய இசை, நடனம் கட்புல கலைகள் உள்ளடங்கலாக)
- **மௌலானா ஆஸாத் புலமைப்பரிசில்** திட்டம் (முதுமாணிப்பட்டம்) - 50
  (விவசாயம் - 10, விஞ்ஞானம் - 20, தொழில்நுட்பம் - 20
- **ராஜீவ் காந்தி புலமைப்பரிசில்** (இளமாணி பட்டப்படிப்பு) - 25
  (தகவல் தொழில்நுட்பம், பொறியியல்)
- **பொதுநலவாய புலமைப்பரிசில் திட்டம்** (கலாநிதிப்பட்ட ஆய்வு) - 05
  (மருத்துவம் தவிர்ந்த ஏனைய துறைகள்)

2. இந்திய அரசானது இந்தப்புலமைப்பரிசில்களை திறமை அடிப்படையில் இலங்கைப் பிரஜைகளுக்கு வழங்குகிறது. இலங்கை அரசின் உயர்கல்வி அமைச்சின் ஆலோசனையுடன் மேற்படிப் பட்டப்படிப்புக்களுக்கான தெரிவுகள் மேற்கொள்ளப்படும்

3. அனைத்துப் புலமைப்பரிசில்களும் மாதாந்த செலவினக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக பாடநெறியின் காலப்பகுதி முழுமைக்குமான கல்விக்கட்டணத்தையும் உள்ளடக்குகின்றன. அத்துடன் தங்குமிடக் கொடுப்பனவு மற்றும் புத்தகங்கள், காகிதாதிகளுக்கான வருடாந்தக் கொடுப்பனவையும் வழங்குகிறது. தவிரவும், கலாச்சார உறவுகளுக்கான இந்தியப் பேராயத்தின் புலமைப்பரிசில் பெற்றவர்கள் அனைவருக்கும் முழுமையான சுகாதார வசதி, இலங்கையிலிருந்து செல்லும் போது இந்தியாவில் மிகக்கிட்டிய விமான நிலையத்துக்கான விமானப் பயணக் கொடுப்பனவு, இந்தியாவின் பல்வேறு இடங்களுக்கான கல்விச் சுற்றுலாக் கொடுப்பனவுடன் மேலும் பல உதிரிக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

4. இலங்கை அரசின் உயர்கல்வி அமைச்சினூடாக மேற்படிப் பட்டப்படிப்புக்களுக்கான தெரிவுகள் மேற்கொள்ளப்படும். இலங்கை உயர்கல்வி அமைச்சானது மேற்படிப் புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. விண்ணப்பப்படிவங்களை இலங்கை உயர்கல்வி அமைச்சின் இணையத்தளமான www.mohe.gov.lk இலிருந்து தரவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை இலங்கை அரசின் உயர்கல்வி அமைச்சின் விலாசத்திற்கோ அல்லது யாழ். இந்தியத் துணைத் தூதரகத்திற்கோ 31 டிசம்பர், 2015 இற்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

5. ஆர்வமுள்ளவர்கள் மேலதிக விபரங்களுக்கு இலங்கை அரசின் உயர்கல்வி அமைச்சு அலுவலகத்தையோ அல்லது யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தையோ தொடர்பு கொள்ளவும்.

***23 நவம்பர், 2015***
***யாழ்ப்பாணம்***